இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

**மாவட்ட செயலகம், மட்டக்களப்பு**

# தேசிய போட்டி விலைக்கேள்வி

## கேள்வி அறிவித்தல்

1. மாவட்ட செயலாளர், மட்டக்களப்பு சார்பில் தலைவர், மாவட்ட பெறுகைக் குழு அவர்களினால் தகைமை மற்றும் தகுதியுள்ள கேள்வியாளர்களிடமிருந்து கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள் சேவைகளுக்கான முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

2. கேள்வி கோரலானது தேசியபோட்டி விலைக்கேள்வி (NCB) முறை மூலம் நடாத்தப்படும்.

3. தகைமையுள்ள கேள்வியாளர்கள் இலங்கையில் வியாபார பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப்பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்விதாரர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

4. தகுதித் தேவைகள் தொடர்பான விபரங்கள் பெறுகை ஆவணங்களில் அடங்கியுள்ளன.
   (அ) ஆர்வமுடைய கேள்விதாரர்கள் அல்லது உற்பத்தியாளர் ஆகக் குறைந்தது 5 வருட காலம் குறித்த வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
   (ஆ) கடந்த 5 வருட காலப்பகுதியில் ஆகக் குறைந்தது ஒரு வழங்கல் நடவடிக்கையில் ஏனும் குறித்த வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

5. ஆர்வமுடைய கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், திராய்மடு மட்டக்களப்பு (Tel No. 0652222154 Fax 0652224466) அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் கேள்வி ஆவணங்களை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 4.00 மணிவரை பார்வையிடலாம்.

6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றினை மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், திராய்மடு மட்டக்களப்பு எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 16.10.2026 முதல் 29.10.2026 வரை மு.ப 9.00 மணியில் இருந்து பி.ப 3.00 மணிவரை கீழே அட்டவணையில் குறிப்பிட்டவாறு மீளளிக்கப்படாத தொகையினை பணமாக செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

7. பூரணப்படுத்தப்பட்ட கேள்வி மனுக்கள் யாவும் இரட்டை பிரதிகளில் 30.10.2026ம் திகதி பி.ப 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக தலைவர், மாவட்ட பெறுகைக் குழு, மாவட்ட செயலகம், திராய்மடு, மட்டக்களப்பு எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாக அல்லது அலுவலகத்தின் முதலாம் தளத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படுதல் வேண்டும். கேள்விதாரரின் ஒப்பந்த வேலையின் விபரத்தை முத்திரையிடப்பட்ட தபாலுறையின் இடப்பக்க மேல்மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். விலை கேள்விகள் வருகை தந்த கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்வி சமர்ப்பித்தல் முடிவுறுத்தப்பட்டவுடன் உடனடியாகத் திறக்கப்படும்.

8. அனைத்து கேள்வி மனுக்களும் கீழே உள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவல்களின்படி, வங்கி உத்தரவாதம் (Bank Guarantee), அல்லது மீளப் பெறத்தக்க பண வைப்பு (Refundable Cash Deposit) வடிவிலான பொருத்தமான கேள்வி மனுப் பிணையுடன் (Bid Security) சமர்ப்பிக்கப்பட வேண்டும். மீளளிக்கத்தக்க பணமாக வைப்புச் செய்யும் பட்சத்தில், கேள்வி மனுதாரர் அந்தப் பணத்தை மாவட்டச் செயலகம், திராய்மடு, மட்டக்களப்பில் வைப்புச் செய்ய வேண்டும் என்பதுடன், அதன் மூலப்பிரதி (Original) கேள்வி ஆவணங்களுடன் இணைத்துச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

9. கேள்வி மனுக்கள் யாவும் மூலப்பிரதி (Original) மற்றும் பிரதி (Copy) என இரண்டு பிரதிகளாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மூலப்பிரதி மற்றும் பிரதி ஆகிய இரண்டும் தனித்தனி முத்திரையிடப்பட்ட உறைகளில் இடப்பட்டு, அவற்றின் மேல் முறையே "மூலப்பிரதி" (Original) மற்றும் "பிரதி" (Copy) எனக் குறிக்கப்பட வேண்டும். இந்த இரண்டு உறைகளும் மற்றுமொரு தனி முத்திரையிடப்பட்ட உறைக்குள் இடப்பட வேண்டும். அந்த வெளி உறையின் மேல் இடதுபுற மூலையில் பொருட்கள் சேவைகளுக்கான விபரம் (Description of Goods & Services) மற்றும் கேள்வி இலக்கம் (Bid Number) தெளிவாக 'எழுதப்பட்டிருக்க வேண்டும்.

10. கேள்வி மனுவானது 15.01.2027 ஆம் திகதி வரை செல்லுபடியுள்ளதாக இருத்தல் வேண்டும்

11. கேள்வி மீதான ஐயப்பாடுகள் நீக்குதல் தொடர்பான கலந்துரையாடல் திராய்மடு, மட்டக்களப்பு மாவட்ட செயலக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் 21.10.2026 அன்று மு.ப 10.30 மணிக்கு நடைபெறும். ஆர்வமுடைய கேள்விக்காரர்கள் தமது சொந்த செலவில் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளலாம்

12. இப்பெறுகையினை கையளிப்பு கடிதம் வழங்குவதற்கு முன்னராக எந்த வேளையிலும் இரத்துச் செய்வதற்கு அல்லது மீளப்பெறுவதற்கு தொழில்தருநர் உரித்துடையவராவார்.

| திட்ட விபரம் மற்றும் கேள்வி இலக்கம் | நேரடி கிரயம் வரி நீங்கலாக (ரூபா) | பொது ஒப்பந்த சட்ட இல. 03-1987 க்கான தேவைப்பாடு | கேள்வி பிணை விபரம் | | மீளளிக்கப் படாத தொகை (ரூபா) | ஒப்பந்த காலம் | நிதி மூலம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | கேள்வி பிணை தொகை (ரூபா) | செல்லுபடி யாகும் காலம் வரை | | | |
| நெல் உலர்த்தும் இயந்திரம் மற்றும் அதனுடன் இணைந்த பாகங்கள் வழங்கி பொருத்துதல் (விபரம் கேள்வி ஆவணங்களில்)- மீளு் கேள்வி கோரல் PMD/SPDNI/2/2026/540 | 20,338,983.06 | ஆம் | 204,000.00 | 12.02.2027 | 5000 | 45 நாட்கள் | அரச/ நிதி |
| நடுத்தர அளவிலான பனிக்கட்டி உற்பத்தி ஆலை அமைத்தல் (Establishment of Medium ICE Factory Plant) PMD/ICE-Fac.pla/DO-4/2026 | 11,016,949.15 | ஆம் | 130,000.00 | 12.02.2027 | 4000 | 45 நாட்கள் | அரச/ நிதி |

ஜே.எஸ். அருள்ராஜ்
*தலைவர்,*
மாவட்ட பெறுகைக் குழு,
மாவட்ட செயலகம், திராய்மடு
மட்டக்களப்பு
15.10.2026